குடன் உற்பத்தி செய்த துணிகளை கோவாப்டெக்ஸ் மூலம் கொள் முதல் செய்து, அதோடு அது நலிந்த சங்கமாக இருப்பதால் கடனை அதிகமாகக் கொடுக்கவும் அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் ஊழல் நடந்துள்ளதாகச் சொன்னார்கள். அந்தச் சங்கத்திற்குப் பணம் கொடுத்தால் என்னாகிறது ?

கைத்தறிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள துணி இரகங்கள்

*வினா எண். 645—திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கைத்தறிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இரகங்களை விசைத்தறிகளில் உற்பத்தி செய்யப்படாமல் தடை செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு எஸ். திரு. என். இராசேந்திரன் : கைத்தறிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இரகங்களை விசைத் தறிகளில் உற்பத்தி செய்யப்படாமல் தடை செய்ய, கைத்தறி ஆய்வாளர், கைத்தறி அலுவலர், துணிநூல் கட்டுப்பாடு அதிகாரிகள் ஆகியவர்கள் அவ்வப்போது விசைத்தறிகளில் துணி உற்பத்தி செய்யப்படும் இடங்களுக்கு திடீர் விஜயம் செய்து கண்காணித்து வருகின்றனர். தடையை மீறுபவர்கள்மீது நீதி மன்றங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. இரா தாமரைக்கனி : கைத்தறிக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள காஸ், பாண்டேஜ் துணி விசைத்தறியில் உற்பத்தி செய்யக்கூடாது என்று உச்ச நீதிமன்றத்தில் ஆணை பிறப்பித்தும் விசைத் தறிகளில் இன்னும் அவை உற்பத்தி செய்யப்படுகின்றன. அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது ? எவ்வளவு வழக்குகள் இதுவரை தொடரப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : கைத்தறிக்கு, அதன் மேம்பாட்டிற்கு 11 இரகத் துணிகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் தவறு செய்கிற பவர்லூம்ஸ் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. இருந்தாலும் வெளியிடப்பட்டுள்ள உத்தரவுகளை நல்ல முறையில் செயல் படுத்த முடியவில்லை. அதற்கான காரணங்கள், நீதி மன்றங்களில் இந்த உத்தரவுகள் செல்லுபடியாகாது என அடிக்கடி வழக்குகள் போடப்பட்டுள்ளன. விசைத்தறிகள், கைத்தறிகளைவிட குறைந்தவிலையில் துணிகள் உற்பத்தி செய்வதாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தின் கீழ் ஓர் உற்பத்தியாளர் தகுந்த காரணங்களை எடுத்துக்கூறினால், மேற்குறித்த உத்தரவு

1981 ஏப்ரல் 4]

களில் இருந்து விலக்களிக்கப்படலாம் என்று கூறப்பட்டுள்ளது. இரண்டாவதாக, இந்த உத்தரவுகளை செயல்படுத்துவதற்காக அதற்காகத் தனி அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை. மூன்றாவதாக, ஒதுக்கீடு உத்தரவுகளில் பல தொழில் நுட்ப விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகள் உத்தரவுகளை நன்முறையில் செயல்படுத்த தடையாய் உள்ளன. மேலே சொன்ன குறைபாடுகளை தவிர்த்து ஒதுக்கீடு உத்தரவுகளை மாற்றியமைப்பதற்காக மத்திய அரசு பஞ்சாலை ஆணையர் தலைமையின்கீழ் ஒரு குழுவை நியமித்துள்ளது.

குழுவின் அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. வழக்குகள் சம்பந்தமாக 1977-இல் இருந்து 1980 வரை பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்குகள் எண்ணிக்கை 1,181. தண்டனை அளிக்கப்பட்ட கேஸ்களின் எண்ணிக்கை 691.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவ மனைகளுக்குத் தேவையான பாண்டேஜ், கஸ் துணிகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நெய்யப்பட்ட துணிகளை, கோ-ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்ய, அரசு திட்டவட்டமான ஆணையைப் பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு பிரைமரி சொசைடிகளிலே தயாரிக்கின்ற துணிகளை கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்து, மருத்துவ மனைகளுக்கு விநியோகித்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கைத்தறி இரகங்களுக்கு ஒதுக்குவது சம்பந்தமாக ஏற்கெனவே அமரர் இராஜகோபாலாச்சாரி அவர்கள் இருந்த காலத்தில் இங்கே ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது—கரை போட்ட வேட்டி, சேலைகள் கைத்தறிக்கு ஒதுக்குவதென்று அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, கைத்தறியைக் காப்பாற்றும் பொருட்டு, நூல் துணிகள் உற்பத்தியை அதிகமாக்குவதற்கு, 36 இஞ்ச் அகலத்திற்கு மேல் நெய்யப்படும். இந்த இரகங்களை விசைத் தறிகள் மூலமாக உற்பத்தி செய்வதைத் தடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும்.

திரு. ஓ. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தற்போது விசைத்தறிகள் மூலம் எந்தவித இரகமான துணிகள் தயாரிக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறிக்காக 11 இரகத் துணிகள் ஒதுக்கியிருக்கிறோம். இது தவிர உள்ளதை விசைத் தறிகள் உற்பத்தி செய்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துணி தேங்கி, நலிந்து வருகின்ற கார ணத்தினால், விசைத் தறிகள் மூலம் தயாரிக்கப்படுவதை கோ-ஆப்டெக்ஸ் வாங்காமல் இருக்க அரசு முன்வருமா? மேலும், விசைத்தறிகள் அனுமதிக்கப்பட்டதற்கும் அதிகமாக எங்கெங்கே இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? அதைத் தடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத் தறிகளுக்கு இந்த அரசு நிச்சயமாக ஆதரவு கொடுக்கவில்லை என்பதை முதலிலே தெரி வித்துக்கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்களுக்கு ஆதரவு, கொடுத்து, உற்சாகப்படுத்துவது அரசின் நோக்கமாகும். இதிலே அனுமதிக்கப்பட்ட விசைத்தறிகள் 49,048. அனுமதிக்கப்படாத விசைத்தறிகள் தமிழ்நாட்டிலே ஒட்டு மொத்தமாக 33,177 இயங்கி வருகிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, கைத்தறிகள் நசிந்து போவதற்கு முக்கியமான காரணம், விசைத்தறிகள் கைத்தறி இரகங்களுக்கு ஒதுக்கப்பட் டுள்ளதை உற்பத்தி செய்வதாகும். ஆகவே, இந்த கைத்தறிக் காக ஒதுக்கப்பட்ட இரகங்களை விசைத் தறிகள் தயாரிக்காமல் இருக்க விற்பனை செய்கின்ற இடத்திலே சோதனைச் செய்து அந்தத் துணி எங்கே உற்பத்தியானது என்பதைக் கண்டறிந்து, நடவடிக்கை எடுக்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்துமா? இது போன்ற அனுமதியில்லாமல் இயங்குகின்ற விசைத்தறிகள் பற்றி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அனுமதியில்லாமல் இயங்கு கின்ற விசைத்தறிகளை அறவே நீக்குவதற்கான ஒரு சூழ்நிலையை அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துணிகளைத் தயா ரிக்கின்ற இரகங்களை விசைத் தறிகள் தயாரித்து, கைத்தறித் துணி என்று முத்திரையிட்டு, விற்பனை செய்வது குறித்து புகார் களை தனிப்பட்ட முறையிலே எங்கே விற்கிறது என்று கூறுவார் களானால், அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும். இப்படி நடைபெறுவதைக் கண்டறிவதற்காக, திடீர் விஜயங்களை இந்த அரசு அதிகாரிகள் மூலமாக நடத்தி, கூடுமானவரை தடை செய் வதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறது.

1981 ஏப்ரல் 4]

[முற்பகல் 10-10]

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்த வரையில், தமிழ்நாட்டில் ஏழு இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள் கிட்டத்தட்ட எல்லா அரசியல் கட்சிகளுமே கைத்தறி நெச வாளர்களைப் பற்றி கருணையோடு பேசுவது அப்போதைக்கு அப்போது நடைபெறுகிறது. இதில் 36 இஞ்சிற்கு மேல் விசைத் தறியில் நெய்யக் கூடாது என்ற உத்தரவு இருக்கிறது. அதையும் மீறி இப்போது நெய்யப்படுகிறது. அதை தடுப்பதற்கு, கண் காணிக்கிற வகையிலே அதிகாரிகளை போட்டு ஏற்பாடு செய்யப் படுமா என்பதையும், ஏற்கனவே இப்படி தவறு செய்பவர்களை குறைந்தபட்சம் சிறைதண்டனை விதிக்கிற அளவிற்கு உத்தரவு போடப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி ஏற்கனவே கூறி இருக்கிறேன். இதுபற்றி மத்திய அரசோடு தொடர்பு கொண்டு எந்தெந்த வழியிலே தடை செய்யமுடியும் என்று ஆராய்வதற்கு ஒரு குழு போடப்பட்டு இருக்கிறது. அதற்கு வேண்டிய நட வடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மகளிர் சங்கங்களுக்கு கறவை மாடுகள் வாங்க நிதி உதவி.

*வினா எண் 646 : திரு சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:—

(அ) மகளிர் சங்ககங்களுக்குக் கறவை மாடுகள் வாங்க அரசு இது வரை எத்தனை யூனிட்டுக்கு நிதியுதவி அளித்துள்ளது ?

(ஆ) ஒவ்வொரு புதிய மகளிர் சங்கத்திற்கும் அரசு கறவை மாடுகள் வாங்க கடன் உதவி அளிக்கும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மகளிர் சங் கங்களுக்கு கறவை மாடுகள் வாங்க அரசு ஏதும் நிதியுதவி அளிக்க வில்லை. ஆயினும் மாநில சமூக நல வாரியம் மூலமாக மத்திய சமூக நல வாரியத்தினர் அளிக்கும் நிதியுதவித் திட்டம் இதுவரையில் 342 யூனிட்டுகளுக்கு கடனுதவி வழங்கியுள்ளது.

(ஆ) தற்போது ஏதும் இல்லை.